<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 1007/2023 |
| Prosecution: | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | மகுடீஸ்வரி (காவல் ஆய்வாளர்) |
| **Father'/Husband's Name** | ~ | சக்திவேல் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt.30.01.2026.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கானாத்தூர் சட்டம் ஒழுங்கு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2019 ஆம் தேதி காலை குரோம்பேட்டை போக்குவரத்து புலனாய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது பம்மல் நல்லதம்பி ரோடு கதவு எண் 19 என்ற இடத்தில் விபத்து நடந்ததாக தகவல் கிடைக்கப்பெற்று விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்று விசாரணை செய்து விபத்தில் இறந்தவரின் தந்தையான சையத் அம்ஜத் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 51/2019, சட்டப்பிரிவுகள் 279,304(A) இ.த.ச.வின் கீழ் TN 01 AN 1213 என்ற பதிவெண் கொண்ட அரசு சிற்றுந்து ஓட்டுநர் மீது வழக்கு பதிவு

செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

2. புகார்தாரரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.. பின்பு விபத்தை கண்ணுற்ற சாட்சிகள் சாந்தி, புஷ்பா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு முகம்மது ரபீக் மற்றும் முகம்மது ஷபீர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **பார்வை மகசர் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் இறந்த ஆலியா தஸீன் என்பவர் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் இறந்த நபரின் உறவினர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேத விசாரணை அறிக்கையில் சாலை விபத்தினால் மரணம் ஏற்பட்டதாக பதிவு செய்தேன். மேற்படி இறந்த நபரின் இறப்பிற்குண்டான உண்மை தன்னை அறிய மேற்படி பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்ய சிறப்பு உதவி ஆய்வளார் சிதம்பரநாதன் மூலமாக குரோம்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அந்த கடித்தத்தின் அடிப்படையில் பிணக்கூறாய்வு நடத்தப்பட்டு மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட தலைக்காயம் மற்றும் பல எலும்பு முறிவுகள் அதிக ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியாலும் இறந்துள்ளார் என பிணக்கூறாய்வு சான்று வழங்கியுள்ளார்.

3. **மேற்படி பிணக்கூறாய்வு சான்று அ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. மேற்படி மருத்துவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சிறப்பு உதவி ஆய்வாளர் சிதம்பரநாதனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் கலீம், வாசு ரகுபதி, சுரேந்தர் ஆகியோர்களை விசாரணை

செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரான எதிரி ஆறுமுகம் என்பவரை கடந்த 28.01.2019 அன்று மாலை 5 மணியளவில் சாட்சிகள் ரகுபதி மற்றும் சுரேந்தர் ஆகியோர்களின் முன்னிலையில் ஆஜர் செய்த எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து, தக்க பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 01 AN 1213 என்ற பதிவெண் கொண்ட அரசு சிற்றுந்தை ஆய்வு செய்ய குன்றத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் வாகனத்தை ஆய்வு செய்து விபத்து வாகன ஆய்வறிக்கை வழங்கிய குன்றத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருநாவுக்கரசு அவர்களிடம் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. மேற்படி ஆய்வறிக்கையில் விபத்தானது எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என கருத்துரு வழங்கியுள்ளார். மேற்படி TN 01 AN 1213 என்ற பதிவெண் கொண்ட அரசு சிற்றுந்து **விபத்து வாகன ஆய்வறிக்கை அ.சா–ஆ.8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. விபத்தில் சிக்கிய மற்றொரு வாகனமான TN 06 E 6118 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தை 04.02.2019 ஆம் தேதி ஆய்வு செய்ய குன்றத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் வாகனத்தை ஆய்வு செய்து விபத்து வாகன ஆய்வறிக்கை வழங்கிய குன்றத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருநாவுக்கரசு அவர்களிடம் சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி ஆய்வறிக்கையில் விபத்தானது எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என கருத்துரு வழங்கியுள்ளார். மேற்படி TN 06 E 6118 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனம் **விபத்து வாகன ஆய்வறிக்கை அ.சா–ஆ.9 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக மேற்படி சட்டப்பிரிவிகளின் கீழ் 22.02.2019 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கு விபத்து ஏற்படும்போது நான் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற இடத்திற்கு நான் எவ்வளவு நேரத்திற்குள் சென்றேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் புகார்தாரருடைய வாகனத்தை குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்தபோது புகார்தாரர் எவ்வாறு விழுந்தார் என தெரிந்துகொண்டீரா என்றால் தெரிந்து கொண்டேன். புகார்தாரர் எவ்வாறு சென்றார் என்றால் பேருந்தை முந்தி செல்ல மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றார். பேருந்து எந்த திசையில் சென்று கொண்டிருந்தது என்றால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றார்கள். புகார்தாரர் புகார் மனுவில் வாகனம் சறுக்கி விழுந்தது தொடர்பாக குறிப்பிட்டுள்ள நிலையில் எதனால் சறுக்கி விழுந்தார் என சொல்லியுள்ளாரா என்றால் எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதாமல் இருப்பமற்காக பிரேக் பிடித்ததால் புகார்தாரரின் வாகனம் கீழே விழுந்ததாக சொல்லியுள்ளார்.

2. இவ்வழக்கு விபத்து கீழே விழுந்தததால் தான் ஏற்பட்டது என்றாலும், பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பேருந்தின் எந்த சக்கரத்தின் சிக்கி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளீர் என்றால் வலதுபுற பின் சக்கரத்தில் விபத்தில் சிக்கியுள்ளார். நான் விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்று விசாரணை செய்யவில்லை என்றாலும் இவ்வழக்கை நான் சரிவர புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற நாளானது வேலை நாள்

என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற இடத்தின் அருகே பத்தடி தூரத்தில் பள்ளி அமைந்துள்ளது என்றால் 50 அடி தூரத்தில் அமைந்துள்ளது. விபத்து நடைபெற்ற சமயத்தில் பள்ளிக்கு மாணவர்கள் வந்துகொண்டிருப்பார்கள் என்றால் அப்போது பள்ளி உள்ளதா என தெரியவில்லை. அரசு சிற்றுந்து வேகமாக செல்வதற்கு வாய்ப்பில்லை என்றாலும் நான் இவ்வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.